DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 20/2023**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | முனியசாமி | Caste: | |
| Father's/Husband Name: | வெள்ளையன் | Calling: | விவசாயம் |
| Village: | வல்லம்பர் தெரு, பார்த்திபனூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 62 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 16.02.2026

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

**முதன்மை விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா பார்த்திபனூர் வல்லம்பர் தெருவில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ,2 சாட்சிகளை தெரியும். சாட்சி மணிகண்டனை தெரியும். அ.சா.1 பூமிநாதன் பட்டியல் இனத்தை சேர்ந்த பள்ளர் சமூகத்தை சேர்ந்தவர். எதிரிகளை தெரியாது. அ.சா.1 எதிரிகள் மீது கொடுத்த புகார் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் விவசாய வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வரும்போது போலிசார் கையெழுத்து கேட்டு போட்டுக்கொடுத்தேன். நான் கேட்டதற்கு போலிசார் கோர்ட்டுல வந்து பேசிக்க என்று சொன்னார்கள்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.16 15:32:37 +0530

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 04.02.2023ம் தேதி மாலை 4.15 மணியளவில் எனக்கு தம்பி முறையான பூமிநாதன் கடைக்கு போவதற்காக வீட்டின் வெளியே நின்றுகொண்டிருந்தார் என்றும் அப்போது அங்கு வந்த அருங்குளம் மறவர் சமூகத்தை சேர்ந்தவர்களான சுபாஷ், அருண் ஆகிய இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்து பூமிநாதன் வீட்டின் முன்பு நிறுத்தி பூமிநாதனை பார்த்து விஜயராஜ் அப்பா யார் என்று கேட்டார்கள் என்றும் பூமிநாதன் நான் தான் விஜயராஜ் அப்பா என்று சொன்னார் என்றும் அப்போது சுபாஷ், அருண் இருவரும் பூமிநாதனை பார்த்து ஈன சாதி பள்ள தேவுடியா மகனே என் சாதிக்காரனை வெட்டுற அளவுக்கு நீ பெரிய ஆளா என்று சொல்லி கையில் வைத்திருந்த கட்டை கம்பால் பூமிநாதனின் தலையில் அடிக்க வரும்போது அதை அவர் வலது கையால் தடுத்தார் என்றும், அப்போது வலது மணிக்கட்டில் பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் அதைப்பார்த்த நானும் கொழுந்தியா முனிஸ்வரி மற்றும் தம்பி மணிகண்டன் வரவும் எதிரிகள் இருவரும் என் தம்பியை பார்த்து இன்றைக்கு தப்பித்துவிட்டாய் என்றைக்காவது ஒருநாள் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு பைக்கில் சென்றுவிட்டார்கள் என்றும் பூமிநாதனை அவரது மனைவி முனீஸ்வரி பரமக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும் கடந்த 05.02.2023ம் தேதி பரமக்குடி காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கும்போது கூறிவிட்டு தற்போது எதிரிகள் இருவரும் பக்கத்து ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானம் செய்துகொண்டு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.16 15:32:42 +0530

எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.16 15:32:47 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 20/2023**

அ.சா.4

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | அஜய்குமார் | Caste: | |
| Father's/Husband Name: | பூமிநாதன் | Calling: | நித்யானந்தம் கிளினிக்கில் வேலை |
| Village: | வல்லம்பர் தெரு, பார்த்திபனூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 26 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 16.02.2026

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355–ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

**முதன்மை விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா பார்த்திபனூர் வல்லம்பர் தெருவில் வசித்து நித்யானந்தம் கிளினிக்கில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பூமிநாதன் என் அப்பா. அ.சா.2 முனீஸ்வரி என் அம்மா. சாட்சி வீரபாண்டியை தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என் அப்பா கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான் எங்கு வைத்து எப்போது போட்டேன் என்றால் சம்பவம் நடந்த அன்று போட்டேன், எங்கு வைத்து போட்டேன் என்று ஞாபகமில்லை. சம்பவம் என்ன என்றால் என் அப்பா வீட்டில் இருக்கும்போது அங்கு வந்து என் அப்பாவை 1ம் எதிரி சுபாஷ் என் அப்பாவை அடித்துவிட்டதாக என் அப்பா சொன்னார். வேறு எதுவும்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.16 15:32:51 +0530

எனக்கு தெரியாது. பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3**. இது சம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 04.02.2023ம் தேதி இரவு 11.30மணியளவில் நானும் நல்லூர் கிராமத்தை சேர்ந்த கருப்பையா மகன் வீரபாண்டி என்பவரும் பார்த்திபனூர் பஜார் பகுதிக்கு வந்துவிட்டு திரும்ப என் வீட்டிற்கு போனபோது பரமக்குடி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார் என்றும், அதில் நானும் வீரபாண்டியும் கையெழுத்து செய்தோம் என்றும் 05.02.2023ம் தேதி டிஎஸ்பி விசாரிக்கும்போது கூறிவிட்டு தற்போது எதிரிகள் இருவரும் பக்கத்து ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானம் செய்துகொண்டு எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.16 15:32:56 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)